**செப்டம்பர் – 28**

# TNPSC துளிகள்

- விமான லெப்டினன்ட் சிவாங்கி சிங் என்பவர் ரஃபேல் போர் விமானத்தை இயக்க இருக்கும் இந்தியாவின் முதல் பெண் போர் விமானி ஆவார்.
- உலக செய்தி வெளியீட்டாளர்கள் சங்கத்தின் வருடாந்திரப் பத்திரிகைச் சுதந்திர விருதான 'தி கோல்டன் பென் ஆஃப் ஃப்ரீடம்' (The Golden Pen of Freedom) என்பது கொலம்பியப் பத்திரிகையாளரான ஜினெத் பெடோயா லிமாவுக்கு வழங்கப் பட்டு உள்ளது.

# தேசியச் செய்திகள்

## கோவிட் - 19 தொற்றால் இறந்த முதல் மத்திய அமைச்சர்

- கோவிட் - 19 தொற்று உறுதியான நிலையில் மத்திய இரயில்வே இணை அமைச்சரும் கர்நாடக பாஜக நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் அங்காடி (65) அவர்கள் காலமானார்.
- கொரோனா தீநுண்மியால் இறந்த முதல் மத்திய அமைச்சர் இவராவார்.
- இவர் பெலகாவி தொகுதியில் நான்கு முறை நாடாளுமன்ற உறுப்பினரானவர் ஆவார்.
- கன்னியாகுமரியைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.பி., எச். வசந்த குமார் அவர்கள் கோவிட் - 19 தொற்றால் இறந்த முதல் நாடாளுமன்ற உறுப்பினராவார்.
- எனவே, 50 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் இடைத்தேர்தலைக் கன்னியாகுமரி மக்களவைத் தொகுதி காணவிருக்கிறது.
- முன்னதாக, 1969 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இத்தொகுதி இடைத்தேர்தலைக் கண்டது.
- இந்தத் தேர்தல் முன்னாள் முதல்வர் கே.காமராஜர் அவர்களின் அரசியல் வருகையைக் குறித்தது.

## அத்தியாவசியப் பொருட்கள் (திருத்தம்) மசோதா - 2020

- அத்தியாவசிய பொருட்கள் (திருத்தம்) மசோதா, 2020 என்ற மசோதாவை செப்டம்பர் 15 அன்று நாடாளுமன்றம் நிறைவேற்றியது.
- இந்த மசோதாவானது 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அறிவிக்கப்பட்ட அவசரச் சட்டத்தை மாற்றுகின்றது
- இது அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955 என்ற சட்டத்தில் திருத்தம்

செய்கிறது.

- அத்தியாவசியப் பொருட்கள் சட்டமானது (1955) பல்வேறு வகையான பொருட்களின் வர்த்தகத்தில் மாநில அரசாங்கங்களின் கட்டுப்பாட்டைச் செயல்படுத்த மத்திய அரசை அனுமதித்தன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப் பட்டது.

***மசோதாவின் அம்சங்கள்***

- தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள், சமையல் எண்ணெய்கள், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு போன்ற பொருட்களை அத்தியாவசியப் பொருட்களின் பட்டியலிலிருந்து நீக்குகிறது.
- தனியார் முதலீட்டாளர்கள் தங்கள் வணிக நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்படும் அதிகப்படியான ஒழுங்குமுறை தலையீடுகளின் மீதான அச்சங்களை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- போர், பஞ்சம், அசாதாரண விலை உயர்வு மற்றும் இயற்கைப் பேரழிவு போன்ற சூழ்நிலைகளில் விவசாய உணவுப் பொருட்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் நுகர்வோரின் நலன்கள் பாதுகாக்கப் படுகின்றன என்பதை உறுதி செய்கிறது.

## வெளிநாட்டுப் பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்த மசோதா, 2020

- வெளிநாட்டுப் பங்களிப்பு ஒழுங்குமுறைச் சட்டம், 2010 என்ற சட்டத்தைத் திருத்த, செப்டம்பர் 23 அன்று பாராளுமன்றத்தால் வெளிநாட்டுப் பங்களிப்பு (ஒழுங்குமுறை) மசோதா 2020 நிறைவேற்றப்பட்டது.
- இந்த மசோதா அச்சட்டத்தின் நிதி நடைமுறைகளைச் சீராக்க வேண்டி, அதன் விதிகளைத் திருத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மசோதாவானது வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வெளிநாட்டுப் பங்களிப்பைப் பயன்படுத்துவதில் இணக்க முறையை வலுப்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

***மசோதாவின் அம்சங்கள்***

- இது 'அரசு ஊழியர்கள்' எந்தவொரு வெளிநாட்டு நிதியையும் பெறுவதைத் தடை செய்ய முற்படுகிறது.
- இது தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் நிர்வாகச் செலவுகளைப் பூர்த்தி செய்ய வெளிநாட்டு நிதியின் பயன்பாட்டை தற்போதுள்ள 50 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகக் குறைக்க முன்மொழிகிறது.
- இது எந்தவொருச் சங்கத்திற்கும் / நபருக்கும் வெளிநாட்டுப் பங்களிப்பு சேர்வதைத் தடை செய்ய முயல்கிறது.
- வெளிநாட்டு நன்கொடைகளைப் பெற தகுதியான அனைத்து தன்னார்வத் தொண்டு


நிறுவனங்கள் அல்லது சங்கங்களின் அனைத்து அலுவலர்கள், இயக்குநர்கள் மற்றும் பிற முக்கியச் செயற்பாட்டாளர்களுக்கு ஆதார் அட்டையைக் கட்டாய அடையாள ஆவணமாக மாற்ற இது முன்மொழிகிறது.

### தொழிலாளர் சட்டச் சீர்திருத்த மசோதாக்கள்

- தொழிலாளர் சட்டம் தொடர்பான பின்வரும் மூன்று மசோதாக்களைத் பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.
    - தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணி நிலைமைகள் குறித்த விதிமுறை,
    - தொழில்துறை உறவுகள் விதிமுறை, மற்றும்
    - சமூகப் பாதுகாப்பு விதிமுறை.
- இது தொழிற்சங்கங்கள், தொழில்துறை அமைப்புகளில் வேலைவாய்ப்பு நிலைமைகள் அல்லது தொழில்துறை முரண்களை விசாரணை செய்தல் மற்றும் அவற்றைத் தீர்த்து வைத்தல் தொடர்பான சட்டங்களைத் திருத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மூன்று மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டதன் மூலம், 29 மத்திய தொழிலாளர் சட்டங்கள் நான்கு பரந்த குறியீடுகளாக குறியிடப் பட்டுள்ளன (ஊதியங்கள் குறித்த முதல் குறியீடு கடந்த ஆண்டு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது).
- இது வணிகம் மேற்கொள்வதை எளிதாக்குகிறது மற்றும் அனைத்துத் தொழிலாளர்களுக்குமான ஒரு சமூகப் பாதுகாப்பை வழங்குகிறது.

## முக்கிய தினங்கள்

### உலக மருந்து தயாரிப்பாளர் தினம் - செப்டம்பர் 25




- ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் மருந்து தயாரிப்போரின் பங்கு குறித்த

விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாள் கொண்டாடப் படுகிறது.

- இந்த நாள் 2009 ஆம் ஆண்டில் துருக்கியின் இஸ்தான்புல்லில் நடைபெற்ற உலக மருந்தியல் மற்றும் மருந்து அறிவியல் மாநாட்டில் சர்வதேச மருந்து கூட்டமைப்புக் குழுவால் உருவாக்கப் பட்டது.
- 2020 ஆம் ஆண்டிற்கான உலக மருந்து தயாரிப்பாளர் தினத்தின் கருப்பொருள் "உலக ஆரோக்கியத்தை உருமாற்றுதல்" என்பதாகும்.

## அணு ஆயுதங்களை முற்றிலுமாக அகற்றுவதற்கான பன்னாட்டு நாள் - செப்டம்பர் 26

- அணு ஆயுதங்களால் மனிதகுலத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தல் குறித்த பொதுவான விழிப்புணர்வை அதிகரிக்க இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது 2013 ஆம் ஆண்டில் இந்நாளை அறிவித்தது,
- இது 2014 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்படுகிறது.
- ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுவதும் உள்ள ஐ.சி.ஏ.என் (ICAN - International Campaign to Abolish Nuclear Weapons) பிரச்சாரகர்களால் இந்நாள் அனுசரிக்கப் படுகிறது.
- ஐ.சி.ஏ.என் என்பது அணு ஆயுதங்களை ஒழிப்பதற்கான ஒரு பன்னாட்டுப் பிரச்சாரம் ஆகும்.
- இது 2017 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றது.




## உலக கருத்தடை நாள் - செப்டம்பர் 26

- கருத்தடை பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கான ஒரு வருடாந்திர உலகளாவியப் பிரச்சாரம் இதுவாகும்.
- இந்தப் பிரச்சாரம் ஒரு பெண் மற்றும் அவரது இணை ஆகிய இருவருக்கும் கிடைக்கக் கூடிய பிறப்புக் கட்டுப்பாட்டு முறைகள் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, அவர்களின் கர்ப்பகால ஆரோக்கியம் குறித்த தகவல்களை

அறிந்து அவர்கள் முடிவு எடுக்கவும் உதவுகிறது.

- கருத்தடை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வேண்டி உலகக் கருத்தடை தினமானது முதன்முதலில் 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 அன்று பத்து பன்னாட்டுக் குடும்பக் கட்டுப்பாடு அமைப்புகளால் அனுசரிக்கப்பட்டது.

## சி.எஸ்.ஐ.ஆர் நிறுவப்பட்ட நாள் - செப்டம்பர் 26

- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிக் குழுவானது (சி.எஸ்.ஐ.ஆர்) 1942 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 அன்று ஒரு தன்னாட்சி அமைப்பாக நிறுவப்பட்டது.
- சி.எஸ்.ஐ.ஆர் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தால் நிதியளிக்கப் படுகிறது.
- மேலும் இது 1860 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம் மூலம் ஒரு தன்னாட்சி அமைப்பாக செயல்படுகிறது.
- இது 38 தேசிய ஆய்வகங்கள், 39 தொடர்பு மையங்கள், 3 புத்தாக்க வளாகங்கள் மற்றும் 5 அலகுகளைக் கொண்ட ஒரு வளர்ந்து வரும் அமைப்பாக உள்ளது.

## உலகச் சுற்றுச்சூழல் சுகாதார தினம் - செப்டம்பர் 26

- உலகச் சுற்றுச்சூழல் சுகாதார நாளைப் பன்னாட்டுச் சுற்றுச்சூழல் சுகாதார கூட்டமைப்புக் குழு ((International Federation of Environmental Health) அறிமுகப்படுத்தியது.
- இதன் அனுசரிப்பானது இந்தோனேசியாவில் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருப்பொருள் "சுற்றுச்சூழல் ஆரோக்கியம் என்பது உலகளாவிய தொற்றுநோயைத் தடுப்பதற்கான ஒரு முக்கிய பொது சுகாதார தலையீடு" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★